2013 ஏப்ரல் 1]

காட்டுகின்றன. கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் நிலத்தின் மதிப்பை பன்மடங்கு உயர்த்தியதன் காரணமாக, தகவல் தொழில் நுட்பவியல் நிறுவனங்கள் சுணக்கம் காட்டுகின்றன. ஒரு சில நிறுவனங்களுடன் நடத்திய கலந்தாய்வில், இரண்டாம் நிலை நகரங்களில் நிர்ணயிக்கப்பட்ட நிலத்தின் விலை அதிகமாக உள்ளதாகவும் கருதுகின்றன என்பது தெரிகிறது. வருங்காலங்களில் தகவல் தொழில்நுட்பவியல் பூங்காவை மேட்டுப்பாளையத்தில் அமைக்க வாய்ப்பு இருப்பின், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்குக் கொண்டு செல்லப்பட்டு, உரிய பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 119, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

119—

தொழிலாளர் நீதிமன்றம்

***22012—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் தொழிலாளர் நீதிமன்றம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் தொழிலாளர் நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் சென்னையில் நான்கு இடங்களிலும், வேலூரில் இரண்டு

[2013 ஏப்ரல் 1

இடங்களிலும், சேலம், கோயம்புத்தூர், கடலூர், திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் தலா ஒரு இடத்திலும், ஆக மொத்தம் 12 தொழிலாளர் நல நீதிமன்றங்களும், சென்னையில் ஒரு தொழிலாளர் தீர்ப்பாயமும் செயல்பட்டு வருகின்றன. திருநெல்வேலி தொழிலாளர் நீதிமன்றத்தைப் பொறுத்தவரையிலும், திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களை ஆட்சி எல்லையாகக் கொண்டு செயல்பட்டு கொண்டிருக்கின்றது. திருநெல்வேலியில் தொழிலாளர் நீதிமன்றமானது ஒவ்வொரு செவ்வாய்கிழமைதோறும் கன்னியாகுமரியிலும் புதன்கிழமைதோறும் தூத்துக்குடியிலும் முகாமிட்டு, வழக்குகளில் விசாரணை மேற்கொண்டு வருகிறது.

திருநெல்வேலியில் உள்ள தொழிலாளர் நீதிமன்றத்தில் தற்போது 199 வழக்குகள் மட்டுமே நிலுவையில் உள்ளன. இவற்றில் கன்னியாகுமரி மாவட்டத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில், நிலுவையில் உள்ள வழக்குகள் 60 மட்டுமேயாகும். அதாவது மிகக் குறைந்த அளவில் வழக்குகள் நிலுவையில் உள்ளதாலும், கன்னியாகுமரிக்கு முகாம் சென்று வழக்குகளை விசாரணை செய்து வருவதாலும், கன்னியாகுமரி மாவட்டத்திற்கு என்று தனியாக தொழிலாளர் நீதிமன்றம் அமைக்க வேண்டிய நிலை எழவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில், போக்குவரத்துத் துறை தொழிலாளர்கள், ரப்பர் தோட்டத் தொழிலாளர்கள், முந்திரித் தோட்டத் தொழிலாளர்கள், பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்கள், மின்சார வாரியத் தொழிலாளர்கள், கூட்டுறவு நூற்பாலைத் தொழிலாளர்கள், கயிறு, மண்பாண்டம், செங்கல், கல் உடைப்பு மற்றும் பல சிறு தொழில் செய்யக்கூடிய தொழிலாளர் பெருமக்கள் நீதி கேட்டு, சுமார் 20 ஆண்டு காலமாக நீதி கிடைக்காத நிலையில் உள்ளனர்.

2013 ஏப்ரல் 1]

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் சம்பந்தமான வழக்குகள் நிலுவையில் இருந்து கொண்டிருக்கின்றன. Delaying Justice is denying Justice என்று சொல்வார்கள். முடியாத வழக்குகள் 60 இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். வழக்குகள் முடியாத நிலையில் இருக்கின்றன. பலர் வழக்குகளைத் தொடுக்க முடியாத நிலையில் கஷ்டப்படுகிறார்கள். திருநெல்வேலியிலே நீதிமன்றம் இருக்கிறது. ஆனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், வாரம் ஒன்றுக்கு செவ்வாய்கிழமை Camp Court ஒன்று நடத்துவதாகச் சொல்லிவிட்டார்கள். ஆனால், Camp Court–கூட ஒழுங்காக நடைபெறுவதில்லை. திருநெல்வேலியிலிருந்து அந்த மலைவாழ் பகுதியில் கன்னியாகுமரி மாவட்டத்தினுடைய எல்லையைப் பார்க்கிறபோது, சுமார் 150 கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. அந்தத் தொழிலாளர் பெருமக்கள் தங்களுடைய தொழில் சம்பந்தமான வழக்குகளை எப்படி திருநெல்வேலியில் வந்து நடத்துவார்கள் என்ற கேள்வியை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பார்வைக்கு வைக்க விரும்புகிறேன். கன்னியாகுமரி மாவட்ட தொழிலாளர்களுடைய நலன் கருதி, இதன் முக்கியத்துவத்தைக் கருதி, கன்னியாகுமரி மாவட்டத்தில் நிரந்தரமாக ஒரு தொழிலாளர் நீதிமன்றம் தேவை என்பதை வலியுறுத்திக் கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்திலே ஒரு தொழிலாளர் நீதிமன்றம் அமைக்க மறுபரிசீலனை செய்வாரா என்பதைக் கேள்வியாக வைக்க விரும்புகிறேன். இந்தக் கேள்வியை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே

தொழிலாளர்கள் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், வழக்குகள் அதிகமாக இருக்கிறதென்று சொல்கிறார்கள். அப்படி இல்லை; இருந்தாலும் அவர்கள் இன்றைக்கு இந்தக் கோரிக்கையை வைத்திருக்கின்றார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு இன்றைக்கு தொழிலாளர்களுக்காகப் பாடுபடுகின்ற ஓர் ஒப்பற்ற அரசாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடத்திலே எடுத்துச் சென்று, இதைப் பரிசீலிப்போம் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்கிறேன். ஆனால், அந்தத் தொழிலாளர் நீதிமன்றத்தை கன்னியாகுமரி, நாகர்கோவிலில் செஷன்ஸ் கோர்ட் வளாகத்திலோ அல்லது பத்மநாபபுரம் பகுதியிலே இருக்கக்கூடிய சார்பு நீதிமன்ற வளாகத்திலோ அமைக்க முன்வருவீர்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மாவினுடைய அரசைப் பொறுத்தவரையில் இன்றைக்குத் எந்த வழக்காக இருந்தாலும் உடனுக்குடன் முடிக்கப்பட்டு இன்றைக்குத் தீர்ப்புகள், வழங்கப்பட்டு, ஒரு நியாயமான, ஒரு நீதிதேவதையினுடைய அரசாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, கண்டிப்பாக உங்களுடைய மாவட்டத்திலும் அந்தத் தொழிலாளர்களின் குறைகளைத் தீர்க்கின்றவகையில், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு கண்டிப்பாக பரிசீலித்து முடிவு செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.